பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 159

திங்கட்கிழமை
05 மே 2025

சித்திரை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## நெடுந்தீவில் மின்தடை; மக்கள் அவதி

யாழ்ப்பாணம், மே 5
நெடுந்தீவில் நேற்றுமுன்தினம் இரவு சனிக்கிழமை முதல் மின்சாரம் இன்றிப் 11

# உள்ளூராட்சித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு, மே 5
நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தல் வாக்களிப்புக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது வாகன அனுமதிப் பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பற்றை வாக்களிக்க வரும்போது எடுத்துவர வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். 11

## சர்வதேச ஒப்பந்தங்களுடன் விளையாடினால் விபரீதமே!



ரணில் 'அட்வைஸ்'

விரிவு - பக்கம் 02

## மாகாணசபைத் தேர்தலுக்கும் தேர்தல் ஆணைக்குழு தயார்

கொழும்பு, ஏப்.5
மாகாணசபைத் தேர்தலை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகம் ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 11

### தேர்தல் கடமையில் இருந்த

## பொலிஸ் உத்தியோகத்தர் மாரடைப்பால் உயிரிழப்பு

வடமராட்சி, மே 5
தேர்தல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்துள்ளது. 11

## தேர்தல் விதிகளை மீறினால் நடவடிக்கை

கொழும்பு, மே 5
உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான பரப்புரைக் காலம் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்துள்ள நிலையில், அமைதிக்காலத்தில் பரப்புரைகளில் ஈடுபடுவோர் மீது 11

## புலிகளிடமிருந்து கைப்பற்றிய 'தங்கத்துக்கு' என்ன நடந்தது?

கொழும்பு, மே 5
இறுதிப்போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தங்கம் தொடர்பாகப் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.
இறுதிப்போரில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டவை என்று தெரிவித்து ஒரு தொகுதி நகைகள் இராணுவத்தால் பொலிஸாரிடம் கடந்த 2ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்துக்கு 11

## தமிழக மீனவர்கள் மீது இலங்கையர் தாக்குதல்?

சென்னை, மே 5
இந்தியாவின் கிழக்குக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும், அந்தத் தாக்குதலைக் கண்டித்து நேற்று நாகப்பட்டின மீனவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இந்திய மீனவர் 11

## கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பப்பெண் மரணம்

யாழ்ப்பாணம், மே 5
கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். காரைநகர், மருதபுரத்தைச் சேர்ந்த திருச்செந்தில் சரோஜாதேவி (வயது-58) என்பவரே இவ்வாறு 11

## தமிழக மீனவர்களின் படகுகளை மூழ்கடிப்பதை ஏற்கமுடியாது!

### பா.ம.க. தலைவர் ராமதாஸ் கண்டனம்

சென்னை, மே 5
இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை ஆழ்கடலில் மூழ்கடிக்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று வெளியான தகவல் அதிர்ச்சியளிக்கின்றது என்று தமிழகத்தின் பாட்டாளி மக்கள் 11

முச்சந்தி முரளி



'உந்தப் போராட்டங்களை நடத்தினவையே இப்ப கணக்குச் சொல்லி பழியில இருந்து தப்ப பாக்கினம் பாருங்கோ'

## போராட்டங்களால் ரூ.300 கோடி நட்டம்

கொழும்பு, மே 5
கடந்த 10 ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் நாட்டுக்குச் சுமார் 300 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.
தொழில் அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானபீடத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.
2021ஆம் ஆண்டு 11

## கடற்கரையில் சடலமாக குடும்பப்பெண் மீட்பு

வடமராட்சி, மே 5
பருத்தித்துறை, மூர்க்கம் கடற்கரையில் இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.
தும்பளை கிழக்கைச் சேர்ந்த 36 வயதுடைய பெண் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் ஒரு பிள்ளையின் தாயாவார். கணவர் வெளிநாட்டில் உள்ளார் என்று தெரி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 04.05.2025 | திகதி 04.05.2025 | திகதி 04.05.2025 | திகதி 04.05.2025 | திகதி 04.05.2025 | திகதி 04.05.2025 | திகதி 04.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4063 | சீட்டிழுப்பு இலக்கம் 1130 | சீட்டிழுப்பு இலக்கம் 0089 | சீட்டிழுப்பு இலக்கம் 2169 | சீட்டிழுப்பு இலக்கம் 5821 | சீட்டிழுப்பு இலக்கம் 1851 | சீட்டிழுப்பு இலக்கம் 0396 |
| ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கினம் கடகம் | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து E |
| | | | சுப்பர் இலக்கம் 18 | | | |
| வெற்றி இலக்கங்கள் 10 35 39 78 | வெற்றி இலக்கங்கள் 05 07 09 17 | வெற்றி இலக்கங்கள் 5 2 4 0 | வெற்றி இலக்கங்கள் 14 17 58 62 | வெற்றி இலக்கங்கள் 1 8 4 2 4 3 | வெற்றி இலக்கங்கள் 12 41 64 81 | வெற்றி இலக்கங்கள் 4 2 4 3 |
| விசேட எழுத்து X | | | | | விசேட எழுத்து J | |

# சர்வதேச ஒப்பந்தங்களுடன் விளையாடினால் விபரீதமே!

*ரணில் 'அட்வைஸ்'*

கொழும்பு, மே 5

**நான் வெளிநாடுகளுக்குச் சென்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டிற்கு எதிராகப் பேசியதோ, செயற்பட்டதோ கிடையாது. இது மக்களுக்குத் தெரியும். சர்வதேச ஒப்பந்தங்களுடன் அரசாங்கம் அரசியல் விளையாட நினைத்தால், அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் கூறியதாவது:

சர்வதேச நாணயநிதியம் நான்காவது தவணை கொடுப்பனவை விடுவிக்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளது. இது அரசாங்கத்துக்குப் பெரும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தும்.

மின்சாரக் கட்டணத்தை உடனடியாக அதிகரிக்கவேண்டும் என்று சர்வதேச நாணயநிதிய அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஏற்கனவே கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அரசாங்கம் தனது அரசியல் போலித்தனத்தால் சிக்கிக்கொண்டுள்ளது.

தற்போதைய மின்சாரக் கட்டணம், மின்சார உற்பத்திச் செலவை ஈடுசெய்யவில்லை என்று சர்வதேச நாணயநிதியம் கூறியுள்ளது. எனவே, கட்டண அதிகரிப்பு தவிர்க்கமுடியாதது என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இவான் பாபஜோர்ஜியோ வலியுறுத்தியுள்ளார்.

எனவே, சர்வதேச விவகாரங்களில் அரசாங்கம் விளையாடக் கூடாது.

நாடு நெருக்கடிக்குள் சென்றால், தலையீடுகள் செய்யவேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ச-இ)

## சுபிரி தன சம்பத

திகதி 04.05.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம் 0529

DLB | ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 9 5 3 5 0 8

## Super Ball DLB

திகதி 04.05.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை

சீட்டிழுப்பு வாரம் 2795 | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 09 25 72 77

## சனிதா DLB

திகதி 04.05.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை

ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கம் 32 37 46 76 | வெற்றி வாரம் 4956

## SASIRI DLB

திகதி 04.05.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை

வெற்றி வாரம் 0676 | வெற்றி இலக்கம் 14 28 50

## லக்ன ராசி

திகதி 04.05.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை

விருச்சிகம் | வெற்றி இலக்கம் 11 34 49 60 | சீட்டிழுப்பு வாரம் 4507

DLB

## KAPRUKA DLB

திகதி 04.05.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை

ஆங்கில எழுத்து Z | சுப்பர் இலக்கம் 29 | வெற்றி இலக்கம் 37 38 54 71 | வெற்றி வாரம் 1971

## அத கோடிபதி DLB

திகதி 04.05.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை

ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 11 36 38 52 | வெற்றி வாரம் 2621

## தேர்தல் கடமையில் 65,000 பொலிஸார்

கொழும்பு, மே 5

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 65ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். தேவையேற்படின் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுவார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் சுமார் 3,000 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக, 800க்கும் மேற்பட்ட நடமாடும் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ச-இ)

## நாணயநிதியத்தின் நிதிவிடுவிப்புக்கு மின்கட்டண விவகாரம் தடையில்லை

*ஜனாதிபதி தெரிவிப்பு*

கொழும்பு, மே 5

மின்கட்டண விவகாரம் சர்வதேச நாணயநிதியத்தின் அடுத்தக்கட்ட தவணை விடுவிப்புக்கு தடையாக அமையாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்னுற்பத்திச் செலவுக்கு அமைய மின்கட்டணத்தைத் தீர்மானிக்கவேண்டும் என்றே சர்வதேச நாணயநிதியம் குறிப்பிட்டுள்ளது. மின்சார சபைக்கு திறைசேரியால் தொடர்ந்து நிதி விடுவிக்கமுடியாது.

இலக்கிடப்பட்ட எதிர்பார்ப்புக்கு அமைவாகவே மின்கட்டணம் தீர்மானிக்கப்படுகிறது. வருடத்தில் இரண்டுமுறை மின்கட்டணம் திருத்தம் செய்யப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் மின்கட்டணம் குறைக்கப்பட்டது. ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களை வரையறுத்து இலங்கை மின்சார சபை நிறுவன ரீதியில் நட்டமடைவதாக மின்சாரசபை குறிப்பிட்டது. இல்லை மின்சார சபை நட்டமடையாது என்று இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டது.

சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் ஜூலை மாதம் மின்கட்டணம் திருத்தம் செய்யப்படும். குறைந்தபட்ச அளவில் மின்கட்டணம் அதிகரிக்கப்படலாம்- என்றார். (ச-இ)





## காலியில் துப்பாக்கிச்சூடு

### ஒருவர் பலி, ஒருவர் காயம்

கொழும்பு, மே 5

காலி மீட்டியாகொட, தம்பஹிட்டியப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

பொலிஸாரின் தகவல்களின்படி, குறித்த பிரதேசத்தில் அமைந்திருந்த உணவகம் ஒன்றின் அருகே மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் 46 வயதுடைய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 52 வயதுடைய நபர் காயமடைந்த நிலையில் பலப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகிறார். இந்தச் சம்பவம் குறித்து மீட்டியாகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஏற்பாடுகள் மன்னாரில் பூர்த்தி

## 91,373 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி
## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**மன்னார், மே 5**

**மன்னார் மாவட்டத்தில் நாளை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட் டுள்ளன. மன்னாரில் 5 உள்ளூராட்சிசபைகளுக்கு 103 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் . 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர் என மன்னார் மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரியும் மன்னார் மாவட்டச் செயலாளருமான க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் ஒரு நகரசபைக்கும் நான்கு பிரதேச சபைகளுக்கும் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ளது.

மன்னார் நகரசபைக்கு 18 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 15 வாக்களிப்பு நிலையங்களில் 16ஆயிரத்து 196 வாக்காளர்களும் மன்னார் பிரதேசசபைக்கு 23 உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய 24 வாக்களிப்பு நிலையங்களில் 24 ஆயிரத்து 327 வாக்காளர்களும் நானாட்டான் பிரதேசசபைக்கு 19 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 25 வாக்களிப்பு நிலையங்களில் 17 ஆயிரத்து 858 வாக்காளர்களும் முசலி பிரதேசசபைக்கு 19 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 16 வாக்களிப்பு நிலையங்களில் 13 ஆயிரத்து 858 வாக்காளர்களும் மாந்தை மேற்குப் பிரதேச சபைக்கு 24 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 34 வாக்களிப்பு நிலையங்களில் 19ஆயிரத்து 134 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். இன்று திங்கட்கிழமை காலை முதல் வாக்கு அளிக்கும் பெட்டிகள் யாவும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 07 மணி தொடக்கம் வாக்களிப்பு ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து 47 வட்டாரங்களிலுள்ள பிரதான நிலையங்களில் வாக்குச்சீட்டுகள் எண்ணும் பணிகள் இடம்பெறும்.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்டச்செயலகத்தில் வைத்து ஒவ்வொரு வட்டாரத் தெரிவுக்கான முடிவுகள் அறிவிக்கப்படும் - என்றார். (ச-60)

# இன்று வெப்பம் அதிரிக்கலாம்!

கொழும்பு, மே 5

மனித உடலால் உணரக்கூடிய வெப்ப நிலை இன்று எச்சரிக்கை மட்டத்துக்கு உயரக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களிலும், மொனராகலை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் வெப்பநிலை அதிகரிக்கக்கூடும்.

கண்டி, கேகாலை, மாத்தளை, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம் ஆகிய மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் வெப்பநிலை 39 பாகை செல்சியஸ் முதல் 45 பாகை செல்சியஸ்வரை அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (எ-இ)


# வேதனக்குறைப்பின்றி தேர்தலன்று விடுமுறை

கொழும்பு, மே 5

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முன்னிட்டு, நாளை 6ஆம் திகதி அரச மற்றும் தனியார் துறையினருக்கு வேதனக் குறைப்பின்றி விடுமுறை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதேவேளை பல்கலைக்கழகங்களின் பணிக்குழாமினருக்கும் மாணவர்களுக்கும் விடுமுறை வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது. அத்துடன், தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பணிக்குழாமினருக்கும் மாணவர்களுக்கும் குறித்த தினத்தில் விடுமுறை வழங்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு




இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவை ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார். நீண்டகால இருதரப்பு நட்புறவின் நிமித்தம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், குறிப்பாக பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு துறைகளில் ஜப்பான் மற்றும் இலங்கை இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது. கடற்பாதுகாப்பு மற்றும் பிராந்திய இணைப்பு ஆகியவற்றில் இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தையும் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தினார். (ச-இ)

# பதில் அமைச்சர்கள் நால்வர் நியமனம்

கொழும்பு, மே 5

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் பதில் அமைச்சர்கள் நால்வர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிற்றல் பொருளாதார அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகங்களுக்கும், அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகத்திற்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)




பரமசிவன் கழுத்தில பாம்பா இருக்கிறது எல்லாத்துக்கும் வசதிதான். நினைச்சதெல்லாம் செய்யலாம். ஆரும் எதுவும் கேக்கமுடியாது. அப்பிடிக் கேள்வி கேட்டாலும் 'நான் ஆர் தெரியுமோ?' எண்டு வெருட்டியே எல்லாத்தையும் சாதிக்கலாம். அப்பிடித்தான் இப்ப ஆளும் கட்சிக்காரர் நடக்கினம். அதுவும் இந்த உல்லூராட்சி எலக்சன் காலத்தில அவையின்ர கூத்துகள் வேற ரகம். இத்தனைக்கும் அடிமட்ட மக்களின்ர விடிவுக்காகத்தான் உவையள் கட்சி தொடங்கினவை. மற்ற அரசியல்வாதிமார் எல்லாம் கள்ளர், காடையர் எண்டும் தாங்கள் மட்டும்தான் சுத்தமான பத்தரை மாற்றுத் தங்கம் எண்டும் எழுப்பம் காட்டினவை. அந்த எழுப்பமெல்லாம் ஆட்சிக்கு வந்தவுடன இருந்த இடம் தெரியாமல் போட்டுது போல. இப்ப இவையளும் பழைய அரசாங்கம் மாதிரி தங்கட அதிகாரத்தை வைச்சு என்னவெல்லாம் செய்ய ஏலுமோ அவ்வளவும் செய்யினம்.

இந்தமுறை உள்ளூராட்சித் தேர்தலில சின்னத்துக்கு மட்டும் வாக்களிச்சால் கானும். ஆக்களின்ர விருப்பிலக்கத்துக்கு புள்ளடி போடத் தேவையில்லை. அது இப்பத்தை ஆளும் கட்சிக்கு நல்ல வசதியாப் போட்டுது. அவையின்ர பிரசார உத்தியே ஆக்களை முன்னிலைப் படுத்தாமல் தங்கட சின்னத்தை முன்னிலைப்படுத்திறதுதான். ஏற்கனவே ரணிலின்ர காலத்திலையும் உள்ளூராட்சித்தேர்தல் வைக்க வெளிக்கிட்டு, பிறகு கடைசிக் கந்தாயத்தில நிண்டு போட்டுது. அதால இந்தமுறை எலக்சனுக்கு, போன முறை எலக்சனுக்கு பேர் குடுத்தவையைத்தான் வேட்பாளரா தமிழ்க் கட்சியள் இஞ்ச போட்டவை. ஆனால் ரணில் உள்ளூ ராட்சித் தேர்தல் அறிவிக்கேக்க, இப்பத்தை ஆளும் கட்சிக்காரர் வடக்கில இப்பிடி வாக்குமழை தங்களுக்கு கிடைக்குமெண்டு பகல் கனவுகூடக் கண்டிருக்கேலை. அதால அந்தநேரம் ஒப்புக்குச் சப்பாணியாத்தான் அந்தத் தேர்தலில ஆக்களைப் போட்டவை. ஆனால் இப்ப அவைக்கு இஞ்சையும் வாக்கு விழும் எண்ட தைரியம் வந்திட்டு. அதோட ஆளும் கட்சி எண்டதால அதிகாரமும் இருக்கு. வாக்குறுதியளையும் அள்ளி எறியலாம். ஆனால் பிரச்சினை என்னெண்டால் அவைக்கு நல்ல வேட்பாளர்மார் இல்லை. ஊரில வெல்லக்கூடிய வேட்பாளர்மாரெயெல்லாம் தமிழ்க்கட்சி யள் அரிச்சு எடுத்ததால, மிஞ்சிக் கிடந்தவையைத்தான் ஆளும் கட்சிக்காரர் தங்கட வேட்பாளர்களாப் போட் டவை.

பார்லிமெண்ட் எலக்சனிலையே வாயப்பிடிச்சால் கூட 'இதெண்டக்கூட' தெரியாத ஆக்களையெல்லாம் வெல்லவைச்சமாதிரி, இந்தமுறையும் சின்னத்தைக் காட்டி வெல்லலாம் எண்டு நினைச்சிருக்கினம். ஆனால் களத்தில இறங்கினபிறகுதான் இந்தத் தேர்தலில ஆக்கள்தான் முக்கியம், சின்னமெல்லாம் சின்னப்பிள்ளைத்தனம் எண்டது தெரியவந்திருக்குது. அதால இப்ப பிரசாரம் முடியிற நாளிலையும், நேற்றும் ஒரு வேலையில அவையின்ர ஆக்கள் இறங்கியிருக்கினம். ஒவ்வொரு வட்டாரத்திலையும் வெல்லக்கூடிய வேட்பாளர்மாரின்ர நோட்டிஸ்களில அவையின்ர சின்னத்தை மறைச்சு, ஆளும் கட்சியின்ர சின்னத்தை ஒட்டிப்போட்டு ஓடிவந்திடுகினம். அந்த நோட்டீஸைப் பாக்கிற சனம், அந்த வேட்பாளர் ஆளும் கட்சிச் சின்னத்தில கேக்கிறார் எண்டு குழம்பி, தங்களுக்கு வாக்கைப் போடுவினம் எண்டதுக்குத்தான் உந்த ஐடியா. பிரசார நாள் முடிஞ்ச பிறகும், இப்பிடி சின்னத்தை மாத்துறதுக்காக பசைவாளியோடையும், போஸ்டரோடையும் திரிஞ்சவையை பொலிஸ்காரரும் கண்டும் காணாமல் விட்டிட்டினமாம். ஆளும் கட்சியெண்டால் என்னவும் செய்யலாம், ஆரும் எதுவும் கேக்கமாட்டினம்தான். ஆனால் சனங்கள் வாக்கால கேள்வி கேக்கேக்கதான் உவையளுக்கு உண்மை உறைக்கும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடியாகமுடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்கள்மூலம்எதிர்பார்த்தகாரியம் அனுகூலமாக முடியும். முக்கிய பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவிகிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பார்கள்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். நண்பர்களின் சந்திப்பும், அவர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சியை காலை யிலேயே தொடங்குவது நல்லது. வாகனத்தில் செல்லும் போது கவனமாகச் செல்லவும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்குத் தெய்வ வழி பாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு அவ்வப்போது மனதில் இனம்தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்பப் பெரியவர்கள் கடுமையாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். கடன் வாங்கு வதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. தாயின் உடல்நலனில் அக்கறை காட்டவும்.

**மகரம்:** உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும், அவர்களால் ஆதாயமும் ஏற்படக்கூடும். சிலருக்கு பிள்ளைகளால் வீண் அலைச்சல் ஏற்படும்.

**கும்பம்:** மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். தாய்மாமன்வழியில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

# லக்னோவை வீழ்த்தியது பஞ்சாப்

**ஐ.பி.எல். தொடரின் 54 ஆவது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி, லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியை 37 ஓட்டங்களால் வீழ்த்தியது.**

தரம்சாலாவில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற லக்னோ அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி யின் பிரப்சிம்ரன் சிங் 91 ஓட்டங்களை யும், ஸ்ரேயாஸ் ஐயர் 45 ஓட்டங்களை யும், ஷஷாங் சிங் 33 ஓட்டங்களையும், இங்லிஸ் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறை வில் 7 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அந்த அணி சார்பாக ஆயுஷ் படோனி 74 ஓட் டங்களையும், அப்துல் ஷமட் 45 ஓட்டங் களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். (ஏ-இ)




# கொல்கத்தா "திரில்" வெற்றி

ஐ.பி.எல். தொடரின் 53 ஆவது ஆட்டத்தில் கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஒரு ஓட்டத்தால் "திரில்" வெற்றி பெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களான சுனில் நரேன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரஹானே 30 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். மற்றொரு ஆரம்ப வீரரான குர்பாஸ் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரகுவன்ஷி மற்றும் ரசல் ஆகியோர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ரகு வன்ஷி 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ரசல் 22 பந்துகளில் அரைச்சதம் அடித்து அசத்தினார்.

20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் கொல்கத்தா அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்க ளைக் குவித்தது.

207 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி களமிறங்கியது. கடைசி வரையில் வெற்றிக்காகப் போராடிய ராஜஸ்தான் அணி, இறுதிப் பந்தில் 3 ஓட்டங்கள் பெறவேண்டியிருந்தது. ஆயி னும் அந்த ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற முடிந் தது. 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட் டுக்களை இழந்து 205 ஓட்டங்களைக் குவித்த ராஜஸ்தான் அணி ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந் தது. (ஏ-இ)






# ஆய்வுநூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 5

மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வுகள் அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.கே பிரபாக ரன் எழுதிய 'கல்வி ஆய்வு அடிப்படை கள்' எனும் நூலின் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் தில்லையம்பலம் வர தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ் வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல் கள்கள் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசி ரியர் கலாசாலையின் முதல்வர் சந்தி ரமௌலீசன் லலீசன் ஆகியோர் கலந் துகொண்டனர். யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறைத்தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன் நூலின் மதிப்பீட் டுரையை ஆற்றினார். (ச-41-66)

# அனலைதீவில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், மே 5

அனலைதீவு பிரதேச மருத்துவமனையில் சிறப்பு மருத்துவ முகாம் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக் கிழமை நடை பெறவுள்ளது.

முகாமில் பல்வேறு மருத்துவ சேவைகள் இலவசமாக வழங்கப்ப டும் என்றும் அனலை வாழ் மக்கள் அனைவ ரும் தவறாது கலந்து கொண்டு இந்த வாய்ப்பை பயனுள்ள தாக மாற்றிக் கொள்ளு மாறும் கனடா அன லைதீவு கலாசார ஒன் றியத்தினர் அறிவித் துள்ளனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

பயம் மற்றும் கவலைகளிலிருந்து விடுபட்டவனே உயர்ந்த மனிதன்.

– கன்பூசியஸ் –

# வாக்களிக்க மறக்காதீர்!

நாளை மே 6 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல். இலங்கையில் உள்ள 336 உள்ளூராட்சிசபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்படும் இந்தத் தேர்தல் நாட்டின் அரசியற் கட்டமைப்பில் மிக அடிப்படையானதும், அவசியமானதுமாகும். ஆனால், ஜனாதிபதித்தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவாக இருக்கும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர். தேர்தல் பிரசாரங்களில் கட்சிகள் காட்டும் ஏனோ தானோ என்றபோக்கும், ஒவ்வொரு முறையும் வாக்களித்து ஏமாந்தது போதும் என்ற மக்களின் மனோ நிலையுமே இவ்வாறு வாக்களிப்பில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று கூறப்படுகின்றது. அவ்வாறு வாக்களிப்பு வீதம் குறைந்தால் அதனால் ஏற்படும் பாதிப்பு மக்களுக்கே என்பதை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும்.

உள்ளூராட்சிசபைகளின் முக்கியத்துவம் பற்றி எம்மில் பலருக்கும் போதிய தெளிவில்லை. உள்ளூராட்சி சபைகள் என்றால், குப்பைகளை அகற்றுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நிர்வாகப் பொறிமுறை என்பதாகவே பலரின் எண்ணமும் உள்ளது. உண்மையில் தேர்தல் அரசியலின் அரிச்சுவடி இந்த உள்ளூராட்சிசபைகளில் இருந்தே ஆரம்பிக்கிறது. குறித்த வட்டாரத்தின் சுகாதாரம், கழிவகற்றல், குடிதண்ணீர் விநியோகம், கட்டட அனுமதி, உள்ளூர் வீதிகளைச் செப்பனிடுதல், இடர்காலப் பாதுகாப்பு என்று எல்லாவற்றையும் தீர்மானிக்கும் ஒரு நிர்வாகத்தை தெரிவுசெய்யவே இந்தத் தேர்தல். ஒருவேளை மக்கள் நலனுக்கு விரோதமானவர்களை நாம் தெரிவு செய்வோமாயின் அடுத்த ஐந்து வருடங்களுக்கு அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியும், மக்களின் உணர்வெழுச்சியும் பாழாக வேண்டியதுதான். எனவே எமக்கான ஒருவரை, மக்களுக்காகப் பாடுபடுபவர்களை இனங்கண்டு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதன் ஊடாகவே எமது தமிழ்த் தேசிய அரசியலின் அடுத்தகட்டத் தலைவர்களை உருவாக்க முடியும். அவ்வாறில்லாத பட்சத்தில் தொடர்ந்தும் நாம் இறக்குமதித் தலைவர்களுக்காகக் காத்திருக்க வேண்டியதுதான்.

தமிழ் மக்களுக்கு இந்தத் தேர்தல் இன்னொரு வகையிலும் முக்கியத்துவமானது. வவுனியா வடக்கு போன்ற எல்லையோரக் கிராமங்களில் நமது வாக்களிப்பு அதிகரித்தால் மட்டுமே, அந்த உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும். அப்போதுதான் அங்குவாழும் தமிழர்களின் தேவைகளும் பிரச்சினைகளும் நேரடியாகக் கவனிக்கப்பட்டு, தீர்வு வழங்கப்படும். உள்ளூர் அளவில் அரசியல் செல்வாக்கைக் கட்டியெழுப்புவதன் மூலம், தேசிய அரசியலில் தமிழர்களின் குரலை வலுப்படுத்த முடியும்.

தேர்தலில் வாக்களிக்காமை என்பது தனது சொந்த வாழ்க்கையின் தரத்தைப் புறக்கணிப்பதற்குச் சமமாகும். வாக்களிப்பதன் மூலம் மட்டுமே உள்ளூர் பிரச்சினைகளுக்கு மட்டுமல்லாது எமது இனப்பிரச்சினைக்கும் ஒரு தீர்வை நோக்கி நகர ஏதுவாக இருக்கும். இந்தநிலையில் வாக்களிப்பைப் புறக்கணிப்பதோ, வாக்களிக்காமல் ஒதுங்குவதோ, தவறான முன்னுதாரணமாக அமைவதுடன் எமது தமிழ்த் தேசியக்குரலையும்பலவீனப்படுத்தும்ஆபத்துமுண்டு. இத்தகையதொரு பின்னணியில், மே 6 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் தமிழ் சமூகத்தின் வளர்ச்சி மற்றும் அடையாளப் பாதுகாப்புக்கு ஒரு முக்கியமான தருணமாகும். ஒவ்வொரு வாக்கும் மதிப்புமிக்கது. எனவே, அனைவரும் வாக்களிப்பில் கட்டாயம் பங்கேற்று, எங்கள் கடமையை நிறைவேற்றுவோம்.



# இலங்கையின் பொறுப்புக்கூறலை நியூசிலாந்து வலியுறுத்துமா?

## வெளிவிவகார அமைச்சர்கள் வருகையில் எதிர்பார்ப்பு

கொழும்பு, மே 5

**உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் மற்றும் போலாந்து வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி ஆகியோர் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இவர்களின் விஜயம் எதிர்வரும் 25 மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடல்களில் நியூசிலாந்து, போலந்து வெளிவிவகார அமைச்சர்கள் ஈடுபடவுள்ளனர். இதேவேளை இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க விடயம் தொடர்பில் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நியூசிலாந்து தொடர்ச்சியாக வலியுறுத்தல்களை முன்னெடுத்து வருகிறது. இலங்கையில் உருவாக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்ற உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும் மிக உன்னிப்பாக அவதானித்துவருவதாக இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் டேவிட் பிண் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# ஆஸ்துமா நோய் நாட்டில் உயர்வு

கொழும்பு, மே 5

நாட்டில் தற்போது ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

உலகளவில் ஒரு இலட்சம் பேரில் 3,340 பேருக்கு ஆஸ்துமா இருப்பதாக சுவாச நோய் மருத்துவ நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகளவில் இளைஞர்களிடையே ஆஸ்துமா பரவலாக உள்ளது.

'இன்ஹேலர்' சிகிச்சையானது பக்க விளைவுகள் இல்லாமல் ஆஸ்துமாவை மிகச் சிறப்பாக குணப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

மக்கள் தொகையில் ஆஸ்துமா பரவலாக இருந்தாலும், நாட்டில் பல நபர்கள் கண்டறியப்படாமல் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தாதியர்கள் சேவை இஸ்ரேலில் கிராக்கி

கொழும்பு, மே 5

இஸ்ரேலிய அரசாங்கத்திடமிருந்து இலங்கைத் தாதிய நிபுணர்களுக்கான வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. கடந்த 4 மாதங்களில் மட்டும் 278 பேருக்கு இஸ்ரேலில் தாதியர் வேலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இஸ்ரேல் அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இஸ்ரேலில் தாதியர் துறையில் தற்போது 2168 இலங்கையர்கள் பணியாற்றிவருகின்றனர். (ச-இ)

# யுவதி வன்புணர்வு; வேட்பாளர் கைது!

கொழும்பு, மே 5

19 வயது யுவதியைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என லக்கலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது. அவர் வீடு வீடாக சென்று தேர்தல் பரப்புரை செய்து கொண்டிருந்த போது. அந்த சிறுமியின் வீட்டிற்குள் சட்டவிரோதமாக நுழைந்து இந்த வன்கொடுமை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# கிளப் வசந்த கொலையின் பிரதான சந்தேகநபர் கைது

கொழும்பு, மே 5

கிளப் வசந்த கொலைச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான 'லொக்கு பெட்டி' என அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமார டி சில்வா, இலங்கை பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடு கடத்தி கொண்டுவரப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பெலாரஸ் நாட்டில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில், டுபாயிலிருந்து வருகை தந்த விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அவர் அழைத்து வரப்பட்டார். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
செவ்வாய்க்கிழமை- சித்திரை 23
06.05.2025
சுபநேரம் : 10.26- 11.56
ராகுகாலம் : 02.56 - 04.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் யாழில் ஏற்பாடுகள் பூர்த்தி

## யாழ். மத்திய கல்லூரியில் பாதுகாப்பு ஏற்பாடு ஆராய்வு




கொழும்பு, மே 5

நாளை 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதனையொட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புகள் தொடர்பாக யாழ். மாவட்டப் பதில் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம.பிரதீபன் மற்றும் வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் நேற்று நேரடியாகச் சென்று ஆராய்ந்தனர்.

இதன்போது பாதுகாப்பு ஏற்பாடுகள், மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கள ஆய்வில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன், தேர்தல் கடமைக்காக இணைக்கப்பட்ட சுகாதார அமைச்சின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் பொ. தயானந்தன், மேலதிக மாவட்டச் செயலரும் (காணி) நலனோம்பல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமானக. ஸ்ரீமோகனன், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. ஜே. ஹாலிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றினார்கள். (ச-66)





# மஹோற்சவம்

மன்னார், மே 5

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்து அருள்பாலித்துவரும் வண்ணாகுளம் குறிஞ்சாக்குளம் அம்பாரவேல் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவக் கொடியேற்றம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

மஹோற்சவத்துக்கான கொடிச்சீலை, பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சர ஆலயத்திலிருந்து மன்னார் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் பாரம்பரிய முறைப்படி மங்கள வாத்தியங்கள் இசைக்க மாட்டுவண்டியில் வீதி வழியாக எடுத்துவரப்பட்டு கொடியேற்றம் இடம்பெற்றது. (ச-41-213)

# குறைவடையும் தங்கத்தின் விலை

இலங்கையில் கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது உள்ளூர் சந்தையில் தங்கத்தின் விலையில் சிறிது சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்த வகையில் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 2 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவாக விற்பனைசெய்யப்படுகிறது.

22 கரட் தங்கம் ஒரு பவுண் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 400 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. அதே வேளை உலக சந்தையில் தற்போது தங்கத்தின் விலை, அதிகரிப்பைப் பதிவு செய்துவருகிறது. (ச-இ)



# காங்கேசன் கடற்கரைப் பூங்கா அபிவிருத்திப் பணிகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே.5

சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள காங்கேசன்துறைக் கடற்கரைப் பூங்காவுக்கு யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை களவிஜயம் மேற்கொண்டார்.

கள விஜயத்தின் போது தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சி.சுதீஸ்னர், மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ. சிவகுமார் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சினால் யாழ்.மாவட்டத்துக்கு 131.20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கமைய அந்தத் திட்டங்களில் காங்கேசன்துறைக் கடற்கரையில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா உள்ளீர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-33-66,9)





யாழ்ப்பாணத்தில்

# ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரிப் போராட்டம்

சர்வதேச ஊடக சுதந்திரதினமான நேற்றுமுன்தினம், படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் ஊடக அமையத்திற்கு முன்பாக இடம்பெற்றது. இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு நீதி கோரியும் கோஷங்களை எழுப்பிப் போராடினர். (ச-33-20)

# நல்லூர்-இந்தியா உறவுப்பாலத்தை வலுப்படுத்தியவர் நல்லை ஆதீனம்

## யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 5

நல்லைத் திருத்தலத்துக்கும் இந்தியாவுக்குமிடையே தொன்மையான பக்திபூர்வமான உறவு இருந்துவருகிறது. நல்லை ஆதீன முதல்வர் இந்த உறவை மேலும் வலுப்படுத்தியதில் பங்காற்றியவர். இந்தியாவிலிருந்து வருகைதரும் பக்தர்கள் அனைவருக்கும் அன்னார் காட்டிய அன்பும், உபசரிப்பும் என்றென்றும் மறக்கமுடியாதவை என்று யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி தெரிவித்துள்ளார். நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கடந்த வியாழக்கிழமை பரிபூரணமடைந்ததையடுத்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லை ஆதீனத்தில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த, எத்தனையோ பக்தர்களின் இதயங்களில் நீங்கா இடம்பிடித்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இறைவனுடன் ஒன்றித்து பரிபூரணம் அடைந்துள்ளார். அவரது பிரிவால் துயருறும் அனைத்து மக்களுக்கும், இந்திய அரசாங்கத்தின் சார்பாகவும், இந்திய மக்கள் அனைவரின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுவாமிகள் வெறும் துறவியாக மட்டுமல்லாது ஒரு ஞானியாக, வழிகாட்டியாக, சமூக சேவகராகத் திகழ்ந்தார். அனைவரையும் அரவணைக்கும் கருணை உள்ளம், எளிமையான வாழ்க்கைமுறை என அனைத்தும் நம் எல்லோருக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஆன்மீக சிந்தனைகளை விதைப்பதிலும், நல்லொழுக்கங்களைப் போதிப்பதிலும் அவர் ஆற்றிய பணி அளப்பரியது - என்றார். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க விசேட ஏற்பாடு

கொழும்பு, மே 5

உள்ளூராட்சிமன்றத்தேர்தலின் போது மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் ஓரளவுக்கு கண்பார்வை மங்கிய அல்லது கண்பார்வையற்ற நபர்கள் தங்கள் வாக்குகளை சுயமாகச் செலுத்தும் வகையில் வாக்குச்சீட்டின் மீது தொட்டுணரக்கூடிய ஸ்டென்சில் சட்டகம் ஒன்றைப் பயன்படுத்தும் வசதி அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் சக்கர நாற்காலி அல்லது ஊன்றுகோல் போன்ற கருவிகளின் துணையுடன் வரும் நபர்கள் வாக்களிப்பு நிலையத் துக்குள் இலகுவாகப் பிரவேசிக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சக்கர நாற்காலியில் வருகைதரும் நபர்கள் மற்றும் உயரம் குறைந்தவர்கள் இலகுவாக வாக்களிக்கும் வகையில் வாக்குப் பெட்டியைக் குறைவான உயரத்தில் வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 1,02387 பேர் வாக்களிக்கத் தகுதி

கிளிநொச்சி, மே 5

**2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்த லில் கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேசசபைகளுக்கு மான தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 2ஆயிரத்து 387 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 2ஆயிரத்து 387பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 108வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது. 40வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்கெண்ணும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஆயிரத்து 450 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். மாற்றுவலுவுள்ளோருக்கான ஏற்பாடுகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன- என்றார். (ச-113)


## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபை நிதி 2025 மற்றும் PSDG 2025

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை சபை நிதி மற்றும் PSDG நிதி என்பவற்றைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 05.05.2025ம் திகதியிலிருந்து 19.05.2025 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 20.05.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
8. கேள்விப் பிணைவைப்புக் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| njh. ,y | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு ( தேவாலய வீதி 9ம் ஒழுங்கை, வேரம் வெள்ள வாய்க்கால் வீதி, கலட்டி வீதி – மிகுதி வேலை, புது வீதி மிகுதிவேலை) NP/14/41(17)/02/CF/09/2025 | 8.024 Mn. | 84 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 05.08.2025 | 81,000.00 | 02.09.2025 |
| 02 | சங்கானை பகுதி வீதி திருத்தம் (ஓடக்கரை வீதி 2ம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி 1ம் ஒழுங்கை (MOH வீதி) NP/14/41(17)/02/CF/10/2025 | 3.741 Mn | 60 நாட்கள் | C9 & Above வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.07.2025 | 38,000.00 | 05.08.2025 |
| 03 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் திருத்தம் (கனகரட்ணம் வீதி 2ம் ஒழுங்கை, அந்திரான் வீதி 2ம் ஒழுங்கை, வலிமேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக கிழக்கு வீதி) NP/14/41(17)/02/CF/11/2025 | 7.234 Mn. | 84 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 05.08.2025 | 73,000.00 | 02.09.2025 |
| 04 | அராலி பகுதி வீதிகள் திருத்தம் (மீனவ வீதி -மிகுதி வேலை, குமுக்கன் 1வது ஒழுங்கை, (வேலன்காடு 2ம் ஒழுங்கை), மாவத்தைவிளையாட்டுக்கழக வடக்கு ஒழுங்கை, சமுர்த்தி ஒழுங்கை) NP/14/41(17)/02/CF/12/2025 | 6.818 Mn. | 84 நாட்கள் | C8 & Above வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 05.08.2025 | 69,000.00 | 02.09.2025 |
| 05 | நெல்லியான் நீர்ப்பாசனத்திட்டத்தின் நடைபாதை திருத்தம் NP/14/41(17)/02/PSDG/02/2025 | 0.847 Mn | 30 நாட்கள் | C9 & Above வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.07.2025 | 9,000.00 | 05.08.2025 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 08.05.2025 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்.
05.05.2025


# வியட்நாம் சென்றுள்ள அநுரவுக்கு வரவேற்பு



கொழும்பு, மே 5

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று அதிகாலை வியட்நாமில் உள்ள நொய்பாய் சர்வதேச விமானநிலையத்தைச் சென்றடைந்தார்.

நொய் பாய் சர்வதேச விமான நிலையத்தில், இலங்கை ஜனாதிபதி மற்றும் குழுவினரை வியட்நாமின் வெளியுறவுப் பிரதி அமைச்சர் நுயென் மன் குவோங், இன மற்றும் மத விவகார பிரதி அமைச்சர் நோங் தி ஹா, இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டிரின் தி டம் மற்றும் வியட்நாமிற்கான இலங்கைத் தூதுவர் ஆகியோர் வரவேற்றனர்.

இலங்கை ஜனாதிபதியின் வருகை, இரு நாடுகளுக்கும் நன்மைகளைத் தருவதுடன், விரிவான இருதரப்பு ஒத்துழைப்பின் புதிய கட்டத்தின் தொடக்கத்தைக் குறிப்பதோடு, பிராந்தியத்திலும் உலகிலும் அமைதி, ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் செழிப்புக்குப் பங்களிக்கும் என்று வியட்நாம் தூதுவர் அந்நாட்டு ஊடகங்களுக்குத் கருத்துத் தெரிவித்துள்ளார். (ச-இ)

# 'ஸ்கைப்' இனியில்லை

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது செயலியான 'ஸ்கைப்' இனை இன்று முதல் மூடப்போவதாக அறிவித்துள்ளது.

ஸ்கைப்புக்குப் பதிலாக பயனாளர்கள் மைக்ரோசொப்ட் டீம்ஸ் என்ற செயலியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஸ்கைப் பயனாளர்கள் தங்களது பயனர் விவரங்களை கொண்டே டீம்ஸ் செயலியில் இணைந்துகொள்ளலாம் என்றும் பழைய உரையாடல்கள் மற்றும் தொடர்புகள் போன்றவை அப்படியே இருக்கும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. கொரானா காலகட்டத்தில் சூம் செயலி, கூகுள் மீட் உள்ளிட்ட செயலிகளைப் பயநர்கள் பெரிதும் பயன்படுத்தியதால் ஸ்கைப் தளத்துக்குரியபயநர்கள் எண்ணிக்கை குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாணி சன சமூகத்தின் 50வது பொன்விழா

**கலைவாணி சன சமூகத்தின் 50 வது பொன்விழா**
**எதிர்வரும் 11.05.2025**

இதனை முன்னிட்டு மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் 10.05.2025 அன்று காலை 6.00 மணிக்கு இடம்பெறும்.

இந்த சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்கு கொள்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 179 2905**
**077 961 5419**
**077 487 9124**
**077 980 3439 (Whatsapp)**

இதனை தொடர்ந்து 11.05.2025 காலை 6.00 மணியளவில் வெளியக விளையாட்டுக்களும், அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.00 மணியளவில் உள்ளக விளையாட்டுக்களும் நடைபெறும்.

## INVITATION FOR BID 2025/01
## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway/Buildings construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-05.05 To 2025-05.19 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T.P:021-2256647, e.mail: vswps@yahoo.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025-05-05 To 2025-05-19 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-05.14 |
| Closing and Opening of Bids | At 2.30 P.M on 2025-05-20 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(16)/W/CF/2025/07 | Construction of Muthaliyar Road, Manipay West. | 4.12 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 41,500.00 | 03.08.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/08 | Renovation of Ampal Road, Mathakal East. | 3.40 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 34,500.00 | 03.08.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/09 | Construction of Kompanipulam Road, Mahiyapiddy. | 3.55 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 36,000.00 | 03.08.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/10 | Construction of Lotton Mill Road, Navaly North. | 3.89 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 39,000.00 | 03.08.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/11 | Renovation of Cultural Hall , Manipay | 3.69 | 60 | C8 or Above (Building ) | 3,500.00 | 37,000.00 | 03.08.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/12 | 1. Reconstruction of American Tamil Mixed School Road, Navaly South. 2. Construction of Old Road,Anaikoddai. | 2.98 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 30,000.00 | 03.08.2025 | 49 |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
Valikamam South west Pradeshiya Sabha,
Manipay.
05.05.2025.

(cs/7255)(N

# அமெ. உளவுப்பிரிவில் கைவைத்தார் ட்ரம்ப்



வொஷிங்டன், மே 5

அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ. மற்றும் இதர உளவுப் பிரிவில் ஆட்குறைப்பு மேற்கொள்ள அதிபர் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார் என அமெரிக்கப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதில் சி.ஐ.ஏ.வில் 1,200 பதவிகளைக் குறைக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

இதர பிரிவுகளிலும் ஆயிரக்கணக்கான பதவிகள் குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சி.ஐ.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நடவடிக்கைகள் சி.ஐ.ஏ.வில் புதுப்பிக்கப்பட்ட ஆற்றலை ஊட்டுவதற்கும், இளம் தலைமுறையினரின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கான பணியை நிறைவேற்றுவதன் உத்தியின் ஒரு பகுதியாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# திருத்தந்தையாக மாறிய ட்ரம்ப்

## கத்தோலிக்கர்கள் கண்டனம்



வொஷிங்டன், மே 5

அடுத்த திருத்தந்தை யாராக இருக்கும் எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, 'நானே திருத்தந்தை யாக இருக்க விரும்புகிறேன்' எனக் கூறியிருந்த ட்ரம்ப் திருத்தந்தை போல் ஆடை அணிந்த புகைப்படமொன்றை வெளியிட்டுள்ளார்.

ஏப்ரல் 21அன்று திருத்தந்தை பிரான்சிஸ் மறைந்தார். அவரின் மறைவுக்கு உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள் துக்கம் அனுசரித்து, புதிய திருத்தந்தைய தேர்ந்தெடுக்கத் தயாராகி வருகின்றனர்.

இந்தநிலையில் வெள்ளை மாளிகையின் அதிகாரப்பூர்வ சமூக ஊடகக் கணக்குகளில் ஏ.ஐ. யால் உருவாக்கப்பட்ட இந்தப் படம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு எதிராக கத்தோலிக்கர்கள் கண்டன விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். (ச-இ)



### கண்ணிவெடிகள் மீட்பாளர் தினத்தையொட்டிய

# தேசியமட்ட ஓவியப்போட்டியில் டிறிபேர்க் மாணவன் இரண்டாமிடம்

தேசிய கண்ணிவெடிகள் மீட்பாளர்கள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் 14 வயதுப்பிரிவில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவன் சதீஸ்வரன் ஷாருஜன் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் குறித்த மாணவனுக்கு சான்றிதழையும் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசிலையும் பிரதமர் ஹரிணி அமரசூரிய வழங்கி வைத்தார். (ச-28)

SMART VISA AND TRAVELS
அனைத்து நாடுகளுக்குமான
அனைத்து விதமான
விசாக்களையும்
விண்ணப்பங்களையும்
**SMART VISA AND TRAVELS**
ஊடாக விண்ணப்பிக்கலாம்.
Tel: 076 008 8098, 021 229 1599
@ No:375, Clock Tower Lane, Jaffna Town
(CS/58157) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் விதிமீறல் முறைப்பாடுகள் 4,150

கொழும்பு, மே 5
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவிருக்கும் நிலையில், 4,150 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
தேர்தல் சட்டத்திட்டங்களை மீறியமை தொடர்பில் மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் மே மாதம் 2ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)




## தென்கிழக்குப் பல்கலைக்கழக 17 ஆவது பட்டமளிப்பு விழா!

கொழும்பு, மே 5
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொதுப் பட்டமளிப்பு விழா நேற்றுமுன்தினமும் நேற்றும் ஆறு அமர்வுகளாக பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் நடைபெற்றது.
ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல். மஜீத் தலைமையில் 2ஆயிரத்து 77 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர். முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொடகொட பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இரண்டாம் அமர்வில் களனிப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறைப் பேராசிரியர் கலாநிதி சீதா.பி. பண்டாரவும் மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியும் கலந்துகொண்டனர்.
முதல்நாள் அமர்வில் விஞ்ஞான பீடத்திலிருந்து 172 மாணவர்களும் பொறியியல்பீடத்திலிருந்து 82 மாணவர்களும் தொழினுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும் கலை கலாசார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.
இரண்டாம் நாள் அமர்வில் முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும் வெளிவாரிப் பட்டப்படிப்பின் 687 மாணவர்களுமாக 2ஆயிரத்து 77 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். (ச-இ)

## பகிடிவதை ஒழிப்பு; கல்வியமைச்சில் இன்று கலந்துரையாடல்

கொழும்பு, மே 5
பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை இல்லாமல் செய்வதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் ஆராய்வதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் அவசர கூட்டமொன்று இன்று திங்கட்கிழமை நிகழ்நிலையில் நடைபெறவுள்ளது.
நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை இல்லாதொழிப்பது பற்றியும், பகிடிவதைக்கெதிராக நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளை மேலும் இறுக்கமாக நடைமுறைப்படுத்துவது பற்றியும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்துள்ளார்.
அனைத்துப் பல்கலைக்கழகங்களில் இருந்தும் பீடாதிபதிகள், வளாக முதல்வர்கள், சட்ட நிறைவேற்று அலுவலர்கள், மாணவ ஆலோசகர்கள் மற்றும் விடுதிக்காப்பாளர்களுடன் துணைவேந்தர்களைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
அண்மையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப்பீட இரண்டாம் வருட மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக ஏற்பட்ட மனஅழுத்தத்தால் உயிர்மாய்ப்புச் செய்திருந்தார்.
இந்தச் சம்பவத்தையடுத்தே கல்வி அமைச்சின் செயலாளரினால் இன்றைய கூட்டத்துக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-26)


## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 04 . 1934



மறைவு
03 . 05 . 2025

### திருமதி குணவதி கந்தசாமி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை,உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. குணவதி கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (03.05.2025) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வு நிலை விளையாட்டுத்துறை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - இளையாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இதயகுமார், கிருஷ்ணகுமார் மற்றும் ஜீவகா (ஜேர்மனி), கிரிஜா (உடற்கல்வி ஓய்வு நிலை விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி), வனஜா (சுவிஸ்), சரோஜா (கனடா), ஜதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜ்மோகன் (ஜேர்மனி), நிமலகுமார் (ஹரே கிருஷ்ணா ஆலயம் உடுவில்) , ஆனந்தராஜா (கனடா) , நிலானி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுராஜ், சுஜிகலா, றுகுணஷாந்த், றுஷானி, ஆரபி , அஸ்வினி , கேஷினி, ஜான்வி, ஆகியோரின் பேர்த்தியும், ஸ்ரேஷ்தா, ஜெரோம், ஏட்ரியன், அஞ்சலி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல் :
குடும்பத்தினர்
077 011 2995 077 951 9973
(CR/44927) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 01 . 1959




மறைவு
03 . 05 . 2025

### திருமதி லோகநாயகி தங்கவடிவேல்

எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளத்தைப் பிறப்பிடமாகவும், கொயிலாமனை கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகநாயகி தங்கவடிவேல் அவர்கள் கடந்த (03.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சரஸ்வதி தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா-நாகம்மா தம்பதியின் பாசமிகு மருமகளும் தங்கவடிவேல் அவர்களின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோபிகா, சிவதாஸ் (பொறியியலாளர் -லண்டன், பழைய மாணவன்-கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,மொறட்டுவப் பல்கலைக்கழகம்), விகிசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மணிவண்ணன் (ஆசிரியர் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம்) அன்பு மாமியாரும் அபிராமின் அன்புப் பேர்த்தியும் சயூத்பவானின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டை பறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மருமகன் (மணிவண்ணன்)
077 729 0336


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறிஸ்து
பல்கலைக்கழகமாக கருதப்படுகிறது
பெங்களூர் | டெல்லி என்சிஆர் | புனே

அனுமதிகள் ஆரம்பம் 2025 - 26

இந்தியாவில் படிக்கவும்

அனைத்து UG திட்டங்களுக்கான விண்ணப்பப் படிவங்களும் இணையதளத்தில் கிடைக்கின்றன.



50% மான புலமைப்பரிசில் விரைவில் பெற்றுக் கொள்ளுங்கள். +94707766011 என்னும் இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.



இலங்கை

www.christuniversity.in


# அக்கினி வெயில் ஆரம்பமானது

கொழும்பு, மே 5

அக்கினி நட்சத்திரம் அல்லது கத்திரி வெயில் எனப்படும் உச்ச கோடைக் காலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கவுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து கோடை வெப்பம் தீவிரமடைந்து வருகிறது. மேமாத தொடக்கத்திலேயே கடுமையான வெயில் பதிவாகியுள்ளது.

அக்கினி நட்சத்திரம் நெருங்கிவிட்டதால், குறிப்பாக கடலோர மாவட்டங்களில், வெப்ப அலை நிலைமைகள் மோசமடையும் என்று மண்டலவானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

மேலும், பல்வேறு இடங்களில் வெப்ப நிலை இயல்பைவிட 5 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் அதிகளவு தண்ணீர் குடிப்பதுடன் முடிந்தவரை நேரடியாகச் சூரிய ஒளியில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



# மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 03 . 1949

மறைவு
02 . 05 . 2025

## நாகலிங்கம் காசிநாதன் (அப்பு)

கொட்டைக்காடு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் காசிநாதன் (அப்பு) அவர்கள் கடந்த (02.05.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், லலிற்குமாரி, லிங்கதாஸ் (பிரான்ஸ்), கோகிலதாஸ், குகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவேந்திரன், சாந்தகுமாரி, யெசிந்தினி, றெஜீவா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முருகையா, நமசிவாயம் மற்றும், நாகேஸ்வரி, பரமேஸ்வரி (பிரான்ஸ்), திருச்சிற்றம்பலம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான பூமணி, கதிராசிபிள்ளை, கதிர்காமநாதன் மற்றும் சின்னத்துரை (பிரான்ஸ்), கோமளாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், யதுர்சிகா, கிரிதரன், யக்சிகா, நிருசனா, நிலானிகா, ஆதித்தியன், கதிரவன், சன்சிகா, ஆருஜன், ஆருணியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கரையாம்பிட்டி (ஆனைக்கோட்டை) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 871 2880, 075 734 6397

கூழாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டை.

(CS/58168) J-1

# Invitation for Bids (IFB)
## URBAN COUNCIL CHAVAKACHCHERI

### Procurement for Supplying & Installation of Split type Air conditioner – Inverter Type

The Chairman, Procurement Committee, on behalf of Chavakachcheri Urban Council now invites sealed bids from eligible and qualified bidders for the items listed below.

| S.No | Bid Number | Item | Qty | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/14/41(3)/02/AC/CF/2025-01<br>NP/14/41(3)/02/AC/CF/2025-02 | Procurement for Supplying & Installation of Split type Air conditioner – Inverter Type<br>• 12000 BTU<br>• 24000 BTU | 07 Nos<br>13 Nos | 92,000.00 | 05.09.2025 |

2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and Additional details are provided in the Bidding Documents.
4. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule / Bidding data & Contract Data (Section 5).
5. Interested eligible bidders may obtain further information from the Secretary, Chavakachcheri Urban Council, Chavakachcheri (T.P No: 021 227 0806, Fax No: 021 227 0079) and inspect the Bidding Documents at the same address on any working day from 2025.05.05 until 2025.05.22 from 09:00 hrs to 14:00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Chavakachcheri Urban Council, Chavakachcheri (T.P No: 021 227 0806, Fax No: 021 227 0079), during the period from 2025.05.05 till 2025.05.22 on working days from 9.00 hrs to 14.00 hrs, upon cash payment of a non-refundable fee of Rupees Three thousand only (Rs. 3000 /=)
7. Bids (Original, Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Procurement Committee, Chavakachcheri Urban Council, Chavakachcheri on or before 10.30 hrs at 2025.05.23 Bid number must be written on the left – hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after the closing in the presence of the Bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid as indicated in the form of bid. (Section -4).
9. All bids shall be accompanied by a bid security in the form of Bid Security included in Section-4. The amount and validity of the bid security shall be as per details given in Section -5.
10. Pre-bid meeting will be held at Conference Hall, Chavakachcheri Urban Council, Chavakachcheri commencing at 11.30 hrs on 2025-05-15
11. The Chairman reserves the right to accept or reject or partially accept any bid and to annul the bidding process and reject all bids at any time without there by incurring any liability to the bidders.

Chairman,
Procurement Committee
Urban Council, Chavakachcheri.

2025.05.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயர்பாதுகாப்பு வலயத்தில்

# விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை யாழ்.மாவட்டச் செயலர் பார்வை

யாழ்ப்பாணம், மே 5

தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறைப் பிரதேசங்களில்உயர்பாதுகாப்புவலயத்திலுள்ள 40.7 ஏக்கர் காணி கடந்த முதலாம் திகதி விடுவிக்கப்பட்ட நிலையில் அங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.மாவட்டப்பதில்செயலர்மருதலிங்கம் பிரதீபன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

வசாவிளான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் மக்களுடன் கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட 20 ஏக்கர் காணியைப் பொதுமக்களுடன் சென்று பார்வையிட்டார்.

இதன்போதுபிரதேசத்தில்கண்ணிவெடி தொடர்பான பரிசீலனையில் ஈடுபட்டுவரும்ஹலோரஸ்ட்நிறுவனத்தினருடன் யாழ்.மாவட்டப் பதில் செயலர் பிரதீபன் கலந்துரையாடினார். தொடர்ந்து காங்கேசன்துறை மேற்கு கிராம அலுவலர்பிரிவில் அமைந்துள்ள மாங்கொல்லைக்கிராமத்துக்கும்சென்றுநிலைமைகளைப்பார்வையிட்டார்.



இதில் தெல்லிப்பழைப்பிரதேசசெயலாளர் திருமதி.சி.சுதீஸ்னர், மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார், கிராமஅலுவலர்கள், ஹலோரஸ்ட் நிறுவனப் பிரதிநிதிகள், பாதுகாப்புப் படைஅதிகாரிமற்றும்பிரிவுகளுக்குரிய பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-66)

## நெடுந்தீவில்...

பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. மின்பிறப்பாக்கியில்ஏற்பட்ட பழுதே மின்தடைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. திடீரென ஏற்பட்டுள்ள மின்தடையால் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-எ-125)

## புலிகளிடமிருந்து...

என்ன நடந்தது? என்பது குறித்து பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

2010ஆம் ஆண்டு போர் முடிந்ததும் தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து 200 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது என்று அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார். ஆனால் 2010 முதல் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் 28 தடவைகளில் மொத்தமாக 31.7 கிலோ தங்கம் இலங்கை மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் 2016ஆம் ஆண்டு 6 கிலோ தங்கம் மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு வரை மொத்தமாக 37.7 கிலோ தங்கம் மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு 40 கிலோ தங்கம் காணாமற்போயுள்ளது என்றும், அது தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் என்றும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார். ஆனால் அவ்வாறான விசாரணைகள் எதுவும் நடக்கவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தில் அரைவாசி இராணுவத்தினரின் கைகளில் உள்ளது எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

2 ஆயிரத்து 377 பேருடைய நகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், அடையாளம் காணப்பட்ட நகைகள் திருப்பி ஒப்படைக்கப்படவுள்ளன என்றும் 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தேர்தல் பரப்புரையின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறியிருந்தார். ஆனால் 25 பேருடைய நகைகள் மட்டுமே திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இப்போது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நகைகள் அளவீடு செய்யப்படவில்லை எனவும், பொருள் பதிவேடு கையளிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ள பொலிஸார், இராணுவத்தினர் எதற்காக இவ்வளவு நாளும் நகைகளை இராணுவ புலனாய்வுப் பிரிவில் வைத்திருந்தனர் என்பது தொடர்பில் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

காணாமற்போயுள்ளது என்று தெரிவிக்கப்படும் நகைகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-6)

## தேர்தல்...

கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்பாளர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் தேர்தல் சட்ட விதிகளை மதித்து நடந்துகொள்ளவேண்டும் என்றும், மீறுவோருக்கு எதிராக சட்டம் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (அ-எ-இ)

## கிணற்றில்...

உயிரிழந்துள்ளார். நேற்றுக் கிணற்றில் குளிக்கச் சென்றபோது, கிணற்று மேடையில் இருந்த பாசி வழுக்கி பாதுகாப்புக் கட்டில்லாத கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளார். அவரைக் கிணற்றில் இருந்து மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இறப்பு விசாரணைகளை தீவகம் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நாகராசா தியாகராசா மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ-எ-26)

## தமிழக...

கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் செயற்படுத்தும் இந்த நடவடிக்கை[illegible]களையும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசாங்கம் தலையிட்டு படகுகளை மூழ்கடிக்கும் திட்டத்தை தடுத்து நிறுத்தவேண்டும். இலங்கைக் கடற்படையால் பறிமுதல்செய்யப்பட்டதமிழகமீனவர்களின் படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-எ-இ)

## போராட்டங்களால்...

முதல் 2022ஆம் ஆண்டுவரை 386 போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்காக 6 லட்சத்து 62 ஆயிரத்து 388 மணித்தியாலங்கள் வேலை செய்யாமல் செலவிடப்பட்டுள்ளது. வருடாந்தம் சுமார் 35 வேலைநிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## கடற்கரையில்...

விக்கப்படுகின்றது. கடற்கரையில் சடலம் ஒன்று ஒதுங்கியுள்ளது என்று கிடைத்த தகவலுக்கமைய பருத்தித்துறைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். விசாரணைகளின் பின்னர் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-100)

## தமிழக மீனவர்கள்...

கள் 24 பேர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இலங்கையைச் சேர்ந்த சிலரே தாக்குதல் நடத்தினர் என்று இந்திய மீனவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், இந்தியக் கடல் எல்லையில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று இந்திய மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-எ-இ)

## பொலிஸ்...

அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான முதியன்சலாகே [illegible] என்ற பொலிஸ் கொன்ஸ்தாபிளே உயிரிழந்தவராவார். நேற்றுக்காலை பொலிஸ் நிலையத்தில் தேர்தல் கடமையில் இருந்த இவர் திடீரென மயக்கமடைந்துள்ளார். சக பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை பருத்தித்துறை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும், அவர் உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். உடற்கூற்று அறிக்கையில் உயிரிழப்புக்கு மாரடைப்புக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-100)

## மாகாணசபைத்...

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படாமையால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் சட்டச் சிக்கல் காணப்படுகின்றது.

பழைய முறையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பான சட்டம் நிறைவேற்றப்படுமாயின் எந்த நேரத்திலும் மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும் - என்றார். (அ-எ-இ)

## உள்ளூராட்சித்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வாக்காளர்கள் தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அலுவலக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பம் செய்தமைக்கான பிரதி ஆகியவற்றை எடுத்துவரவேண்டாம். வாக்குச்சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு எதிரே கட்சிகளின் சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களின் பெயர்களுக்கு எதிரே சுயேச்சைக் குழுக்களின் சின்னங்களும் இருக்கும். அதற்கு எதிராக வெற்றுக்கட்டத்தில் புள்ளடி (X) இடவேண்டும். வாக்குச்சீட்டில் எழுதவோ, சித்திரம் கீறவோ, கிறுக்கவோ, எண்ணங்களை எழுதவோ, பெயர்களை எழுதவோ வேண்டாம். அவ்வாறு செய்தால் வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும். புள்ளடி (X) இடப்படாத வாக்குச்சீட்டும் நிராகரிக்கப்படும் - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட போக்குவரத்துச் சேவை இராணுவத்தினருக்கு 'கட்'

இராணுவம் மற்றும் அதிகாரிகளுக்காக இதுவரை வழங்கப்பட்ட விசேட போக்குவரத்துச் சேவையை இடை நிறுத்த இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது. போர்க் காலம் தொட்டு விடுமுறையில் செல்லும் இரா ணுவத்தினருக்கான விசேட போக்குவரத்துச் சேவை களை இராணுவத் தலைமையகம் வழங்கிவந்தது.

கொழும்பில் இருந்து வார நாள்களில் அலவ்வை, மீரிகம, கணேமுல்லை, காலி, மாத்தறை, குருநாகல், தெல்தெனிய, கண்டி, கதுருவெல, மெதவச்சிய மற் றும் நாத்தாண்டிய வரை இராணுவத்தினருக்கான விசேட பேருந்துச்சேவைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. வார இறுதி நாள்களில் குறித்த பேருந்துச் சேவைகள் பதுளை, மஹியங்கனை, மொனராகலை மற்றும் சிலாபம் வரையும் நீடிக்கப்பட்டது.

எனினும் இராணுவத்தினரின் எரிபொருள் பயன் பாட்டை மட்டுப்படுத்தும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக தற்போதைக்கு மேற்குறித்த பேருந்துச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதற்குப் பதிலாக இராணுவத்தினர் செல்லவேண்டிய இடங்களுக்கு அருகாமையில் உள்ள புகையிரத நிலையம் வரை அவர்களுக்கு இலவச புகையிரதப் பயண வசதிகளைச் செய்துகொடுக்க இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது. (ச-இ)

# சுற்றுலாவிகள் அதிகரிப்பு

2025 ஏப்ரலில் மொத்தம் ஒரு இலட்சத்து 74 ஆயிரத்து 608 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையகத்தின் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இது 2024 மார்ச்சில் வந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடு கையில் 17.3வீதம் அதிகமா கும். அதன்படி, 2025ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணி களின் எண்ணிக்கை 8 இலட்சத்து 96,884 ஆகப் பதிவாகி யுள்ளது. (ச-இ)





# மஹாதேவ சிவாச்சாரியாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மே 5

இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் தாணு மஹாதேவ சிவாச் சாரியாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை கடந்த மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மு.ப. 11 மணியளவில் இணுவில் சிவ காமி அம்மன் கோவில் திருமண மண்டபம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இணுவில் சிவஸ்ரீ சாம்பசிவ சோம சபேசக்குருக்கள் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில், சிவாச்சாரியாரின் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான குருகுலப்பணி தொடர்பான உரைகள், நினைவுப்பகிர்வு, சாதனைகள், வாழ்க்கைப் பயணம் தொடர்பான கருத்துரைகள் என்பன இடம்பெற்றன. பேச்சாளர்க ளாக சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்(கதிரமலை சிவன் தேவஸ் தானம் சுன்னாகம்), சிவஸ்ரீ கு.க வைதீஸ்வரக் குருக்கள் அச்சு வேலி, சிவஸ்ரீ.சோ.பிரசன்னாக் குருக்கள்(இணுவில் பரராசசேக ரப் பிள்ளையார் கோவில்), சிவஸ்ரீ பாலகைலாசநாதக் குருக்கள் (சுதுமலை), சிவஸ்ரீ சிவபாலசர்மா, சிவஸ்ரீ மஹாதேவ தாணுநா தக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் வடபகுதியின் அந்தணப் பெருமக்கள் பலரும் மற்றும் அவரது குருகுலத்தில் பயின்ற பழையமாணவர்களும் கலந்து கொண்டார்கள். (ச-33)

திருமுருகன் பொதிகள் சேவை

விசேட சலுகைகள் வெளிநாடுகளுக்கான 11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம் UK-1380/=. France-1930/=. Germany-1880/=. Australia-2130/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் திருமுருகன் பொதிகள் சேவை

321, K.K.S Road Jaffna (கிளைகள்-கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுகுடியிருப்பு, மல்லாவி)

தொடர்புகளுக்கு: 077 755 4528

வேலைவாய்ப்பு

XMARD SUPERMARKET
(Everywhere for You)

எமது சுப்பர் மார்க்கெட்டின் கிளைகளுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- முகாமையாளர் - Manager (ஆண், பெண்)
- காசாளர் - Cashier (ஆண், பெண்)
- களஞ்சியக் கொறுப்பாளர் - Store Keeper (ஆண்)

யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் எப்பகுதி யிலும் பணியாற்றக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

சுயவிபரக் கோவையினை xmardnetwork@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 0741011345 எனும் Whatsapp இலக்கத்திற்கு அனுப்பவும்.

# புகைப்படத்தைப் பதிவிட ஜனாதிபதியால் கட்டுப்பாடு


## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு, மே 5

புகைப்படப் பத்திரிகையாளர் லஹிரு ஹர்ஷன என்பவர் தனது முகநூல் பக் கத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க வின் புகைப்படம் ஒன்றை பதி விட்டிருந்த நிலையில் அந்தப் புகைப் படத்தை நீக்குமாறு ஜனாதிபதி ஊட கப்பிரிவால் விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்ட னம் தெரிவித்துள்ளது.

அரசியல் அல்லது வேறொரு செல் வாக்குக் காரணமாகப் புகைப்படப் பத் திரிகையாளர் லஹிரு ஹர்ஷனவினால் பதிவிடப்பட்ட புகைப்படத்தை நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தால் அது கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் ஒரு விடயமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு கட்டுப்பாடு களை விதிப்பதற்குப் பதிலாக உரையா டலில் ஈடுபட்டிருக்கலாம். கேள்விக்குரிய புகைப்படங்களை வெளியிடுவது சட்ட விரோதமான செயலல்ல என்றும் சுதந் திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# அதிவேகத்தால் கூரையில் ஏறிய ஓட்டோ



கொழும்பு, மே 5

வேகக்கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி வீட்டுக்கூரையில் ஏறி விழுந்து விபத்துக்குள் ளான சம்பவம் மாவனெல் லையில் இடம்பெற்றுள்ளது.

அரநாயக்கமாவனெல்ல வீதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டி சாண்ட் மன்னா வளைவில் திரும்பும்போது வீதியை விட்டுவிலகி அருகிலிருந்த வீட்டின் கூரையின்மேல் விழுந்து விபத்துக்கு உள் ளாகியுள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த பயணிகள் இருவர் காயமடைந்த நிலை யில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளனர். (ச-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org